மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படிப்பட்ட நிலை இல்லை. பொதுவாக, நாட்டில் பால் பற்றாக்குறை நிரம்ப இருக்கிறது. ஆகவே, கால்நடைகளை அபிவிருத்தி செய்வது, பால் உற்பத்தியைப் பெருக்குவது ஆகியவற்றிலே அரசாங்கம் தீவிரமான திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

திரு. க. இராமமூர்த்தி : திருப்பூரில் அமைக்கப்பட்டிருக்கும் பால் குளிர்பதனச்சாலையில் 6,000 லிட்டர் பாலைக் குளிர்பதனம் செய்யும் தகுதி இருந்தும் 1,250 லிட்டர் பால்தான் தற்போது குளிர்பதனம் செய்யப்படுகிறது. 6,000 லிட்டர் அளவுக்குப் பால் கிடைக்க வசதி இருக்கிறதா ? அந்த வசதி இல்லையென்றால் அந்த அளவுக்குச் செலவு செய்து குளிர்பதன யூனிட்டை அமைக்க வேண்டிய அவசியம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வசதி இல்லாமல் இல்லை. தற்போது கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் அமைக்கப்பட்டிருக்கிற சப்ளை யூனிட்டுகள் மிகக்குறைவாக இருக்கின்றன. மேற்கொண்டு பாலை பெறுவதற்காக இந்தச் சங்கங்கள் முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றன. மேற்கொண்டு கால்நடைகளை வாங்குவதற்கு அரசாங்கம் கடன் வசதி செய்திருக்கிறது. மேலும் இரண்டு மூன்று குளிர் பதன சாதனங்களை நிறுவுவதற்குக் கூட திருப்பூர் பகுதியில் வாய்ப்புகள் இருக்கின்றன.

திரு. செ. பாலசுப்பிரமணியம் : 6,000 லிட்டர் பால் குளிர்பதனம் செய்வதற்கு வசதி இருந்தும் 1,250 லிட்டர் பால்தான். குளிர்பதனம் செய்யப்படுகிறது. அந்தப் பகுதியில் ஊத்துக்குளி போன்ற பல ஊர்களில்—ஊத்துக்குளியில் மட்டும் 35-க்கு மேற்பட்ட தனிப்பட்டவர்கள் சென்னை, பெங்களூர் போன்ற நகரங்களுக்குப் பால் அனுப்பும் அளவுக்குப் பால் வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இது போன்ற ஊர்களில் இருந்தும் பாலை வாங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எந்த அளவுக்கு இதனுடைய அமைப்பு இருக்கிறது என்று தெரியவில்லை. ஊத்துக்குழியைப் பொறுத்த வரை சாத்கமான நிலைமை இருக்குமானால் அதைப்பற்றியும் யோசிக்கலாம்-

நீலகிரி மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட படிப்பு உதவித் தொகை

*97. வினா :—**திரு. ஜெ. பெள்ளி கௌடர் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967–68-ம் ஆண்டுக்கு நீலகிரி மாவட்டத்திற்கு பிற்பட்ட, அரிஜன மாணவர்களுக்கு உதவித் தொகை (scholarship) வழங்குவதற்கென ஒதுக்கப்பட்ட தொகை முறையே எவ்வளவு ?

(இ) உதவித் தொகை கோரி வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து :

தமிழக அரசு உதவித்தொகைகைள்.	மெட்ரிக் முன் படிப்பு.	மெட்ரிக் மேற்படிப்பு.	மொத்தம்.
	ரூ.	ரூ.	ரூ.
(அ) பிற்பட்ட வகுப்புகள்.	5,000	28,200	33,200
அரிசன வகுப்பினர்.	39,300	100	39,400
(இ) பிற்பட்ட வகுப்பினர்.	350	359	..
அரிசன வகுப்பினர்	2,796	..	..

1968 பிப்ரவரி 28]

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்த ஒரு மாவட்டத்திற்கு ஒதுக்கப் பட்டிருப்பது போல் மற்ற மாவட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? இப்போது படிக்கக்கூடிய மாணவர்களில் முக்கால்வாசி பேருக்கு மேல் ஸ்காலர்ஷிப் வரவில்லை என்ற நிலை இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : நீலகிரி மாவட்டத்திற்கு மாத்திரமல்லாமல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மற்றவற்றைப் பற்றிக் கேள்வி கேட்டால் பதில் தரப்படும். பொதுவாக, விண்ணப்பம் செய்துள்ள அரிசன மாணவர்கள் அத்தனை பேருக்கும் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. பிற்பட்ட மாணவர்களைப் பொறுத்தவரை சில தகுதிகளை வைத்துக்கொடுக்கிறபடியால் ஒரு சிலருக்குத் தரப்படாமல் இருக்கலாம்.

திரு. கே. போஜன் : கடந்த ஆண்டில் உதவிப் பணம் கோரிய அரிசன மாணவர்களுக்கும், பிற்பட்ட மாணவர்களுக்கும் கொடுக்கக்கூடிய அளவுக்கு ஒதுக்கப்பட்ட தொகை இல்லாது குறைவாக இருந்ததால் எல்லோருக்கும் உதவித் தொகை கொடுக்கப்படவில்லை எனத் தெரிகிறது. ஆகவே அந்த உதவித் தொகை ஒதுக்கீட்டை அதிகரிக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : 1967–68ல் எந்த அரிசன வகுப்பு மாணவரும் மெட்ரிக் மேற்படிப்புக்கு உதவித் தொகை கோரி விண்ணப்பம் செய்யவில்லை. மெட்ரிக் முன் படிப்பைப் பொருத்தவரை 2,796 பேர் விண்ணப்பம் செய்து அனைவருக்கும் உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. பி. எஸ். மணி : அரிசனங்கள், பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக கொடுப்பதற்காக தகுந்த அளவு நிதி ஒதுக்கப்படுகிறதா அல்லது விகிதாசாரப்படி ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறதா ? ஒதுக்கப்பட்ட நிதி போதுமான அளவு இல்லையென்றால் சப்ளிமெண்டரி கிராண்டில் நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் உதவித் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. சப்ளிமெண்டரி கிராண்டு போட்டு கொடுக்கவேண்டிய தேவை ஏற்பட்டால் அதுவும் செய்யப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : ஒவ்வொரு ஜில்லாவிலும், அரிசன, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எந்த அடிப்படையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது ? சிறிய ஜில்லா, பெரிய ஜில்லா என்ற அடிப்படையிலா அல்லது அந்த மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையிலா ? எல்லா ஜில்லாக்களுக்கும் சமமாக ஒதுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : சிறிய ஜில்லா, பெரிய ஜில்லா என்ற ஏற்றத்தாழ்வு கிடையாது. பிற்பட்ட மாணவர்களாக இருந்தால், மார்க்குகள், ஆண்டு வருமானம் இவைகளை அடிப்படையாக வைத்து உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. அரிசன மாணவர்கள் யாராக இருந்தாலும் தரப்படுகிறது.

திரு. செஞ்சி. வெ. முனுசாமி : பிற்பட்ட மாணவர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் உதவித் தொகை தரப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தகுதிகள் என்றால் என்னென்ன தகுதிகள் ? ஏழையாக இருந்தும், 100-க்கு 50 மார்க்குகள் பெற்றிருந்தும் உதவித் தொகையைப் பெறமுடியாத பிற்பட்ட மாணவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவை என்னென்ன தகுதிகள் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : வருமானம் அல்லை, வாங்கிய மார்க்குகள் அடிப்படையில் இந்த உதவித் தொகை பிற்பட்ட மக்களுக்குத் தரப்படுகிறது.

திரு. கே. விநாயகம் : இந்தச் சலுகைகளைப் பொறுத்தவரை, அரிசன மாணவர்கள் விண்ணப்பம் செய்தாலே கொடுத்து விடுகிறார்கள். பிற்பட்ட இனத்தவர்கள் மட்டும் 100-க்கு 45 மார்க்குகள் வாங்கவேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். இதனால்தான் சிக்கல் வருகிறது. ஆகவே, பிற்பட்ட இனத்தவர்களுக்குக் கொடுப்பதற்கும் சலுகைப் பணத்தை அதிகரித்து 45 மார்க்குகள் வாங்க வேண்டுமென்பதை 40 என்று குறைத்து இப்போது இருக்கும் விதிமுறையைத் திருத்தியமைக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது இருக்கிற விதிமுறைகள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். ஓராண்டுக்கு முன்னாலே இருந்த அடிப்படையிலேதான் இப்போதும் தரப்படுகிறது. மேலும் பரிசீலனை செய்து பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வரலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இப்போது பாக்வார்டு கிளாசுக்கு எவ்வளவு பணம் தரப்படுகிறது ? ஷெட்யூல்டு காஸ்ட்டுக்கு எவ்வளவு பணம் தரப்படுகிறது ? கொடுக்கக்கூடிய பணம் மிகவும் குறைவாக இருப்பதால் அது எந்த ஒரு அடிப்படைத் தேவைக்கும் போதாத நிலை இருக்கிறது என்பதை அரசாங்கம் உணருமா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : கொடுக்கப்படுகிற தொகை போதுமானதாக இல்லையென்பதை அரசாங்கம் உணருகிறது. யார் யாருக்கு எவ்வளவு தொகை கொடுக்கப்படுகிறது என்ற விவரம் வேண்டுமானால் தனியாகக் கேள்வி போட்டால் விளக்கம் தரலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சாதி, மத, இன அடிப்படைகளை வெறுக்கக்கூடிய சர்க்கார் இப்போது இருக்கிறது. இந்த மாதிரி சலுகை கொடுப்பது மறைமுகமாக ஜாதி அடிப்படையில் இருப்பதால் இதை ஒழித்துவிட்டு ஏழை, பணக்காரன் என்ற இரண்டே ஜாதி அடிப்படையில் எல்லா வகுப்பினருக்கும் பி.யு.சி. வரை இலவசக் கல்வி அளிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : சர்க்காருக்கு எந்தவித சாதி மத வேறுபாடும் கிடையாது. மக்களிடையே அந்த வேறுபாடு இருக்கிறது. பொருளாதார ஏற்றத் தாழ்வை உத்தேசித்துத் தான் இந்தச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. கனம் அங்கத்தினர் அவர்கள் சாதி மத பேதமற்ற மாணவர் சமுதாயம் அமைய வேண்டுமென்பதற்காகப் பாடுபடுவார்கள் என்று நம்புகிறேன்.

திரு. எம். சண்முகம் : மாணவர்களுக்கு உதவி செய்து வருவதில், நம் மாநிலத்தில் பிற்பட்ட வகுப்புகளின் அடிப்படையில் கொடுக்கப்பட்டு வரும் சலுகையை இனியும் நீடித்துக் கொடுத்தால் மத்திய அரசாங்கத்தின் உதவியை கொடுக்க முடியாது என்று மத்திய அரசாங்கம் ஏதாவது அறிவித்திருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட அறிவிப்பு எதுவும் மத்திய அரசிடமிருந்து வரவில்லை.

திரு. எம். பூபதி : அமைச்சர் அவர்கள் பிற்பட்ட மக்கள், ஹரிஜன மக்கள் பற்றிய கணக்கை மட்டும் கூறினார்கள். மிகவும் பிற்பட்ட வகுப்பு மக்களுக்கு எந்த அளவிற்கு உதவி செய்யப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : இந்தக் கேள்வி பிற்பட்ட மாணவர்களுக்கும், அரிசன மாணவர்களுக்கும் வழங்கும் உதவித் தொகை பற்றியது. மிகவும் பின்தங்கிய மாணவர்களைப் பற்றி கேள்வி கேட்கப்படவில்லை. அதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால் உரிய பதில் தரப்படும்.

1968 பிப்ரவரி 28]

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் கேள்வி கேட்கும்போது இந்த அரசாங்கம் ஜாதி அடிப்படையில் இந்தப் பணத்தைக் கொடுக்கிறமாதிரி சொன்னார்கள். பி.யு.சி. வகுப்பில் மிகவும் பின்தங்கியிருப்பவர்களுக்கு வருமான அடிப்படையில் எந்த ஜாதியாக இருந்தாலும் ரூ. 2,000-க்கு குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு அவர்கள் எந்த ஜாதியாக இருந்தாலும் இலவசம் என்ற அடிப்படையில் இந்த அரசு கொடுக்கிறது என்பது உண்மைதானா ? இதற்கு அமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

(பதில் இல்லை).

திரு. கே. விநாயகம் : இப்போது கொடுக்கப்படுகிற சலுகை, ஜாதி அடிப்படையில் அல்ல இந்த பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் என்ற ஜாபிதா இருக்கிறது. இவைகள் எல்லாம் ஜாதிகளுக்காக ஒதுக்குவது அல்ல. எட்யூக்கேஷனலி பாக்வேர்ட், கல்வித் துறையில் அவர்கள் எல்லாம் பிற்பட்டவர்கள் என்று எழுதப்பட்டு அதன் அடிப்படையில்தான் இந்த ஜாதிகளை எடுத்தார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : கல்வி மட்டுமல்ல, பொருளாதார அடிப்படையையும் சேர்த்துத்தான் ஜாதிகளின் ஏற்றத் தாழ்வைப் பிரித்து அதற்குரிய சலுகைகள்,—கல்விக்கு இன்னின்ன சலுகைகள், பொருளாதாரத்தில் உயர வேறு பல சலுகைகள் என்று இன்று பிரித்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

திருமதி. கே. பி. ஜானகியம்மாள் : பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த சில மாணவர்களுக்கு மதுரை மாவட்டத்தில் பி.யு.சி. படிக்கக்கூடிய காலத்தில் அவர்கள் தகுதியைப் பார்த்து உதவித் தொகை கிடைத்துள்ளது. ஆனால் அதே நேரத்தில் பி. ஏ. படிப்புக்காக வேறு ஒரு கல்லூரிக்குச் செல்லும் நேரத்தில் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய பாரம் புதிய பாரமாக இருந்த காரணத்தினால் அந்த உதவித் தொகை இந்த ஆண்டு கிடைக்கவில்லை என்று பல மாணவர்கள் மனு அனுப்பியிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு. அதுபற்றி என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ? அப்படிப்பட்ட மனுக்கள் வரவில்லை என்றாலும், அப்படி பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு அரசாங்கம் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : என்னென்ன காரணத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுபற்றி தனியாகக் குறிப்பு எழுதித் தந்தால் சர்க்கார் தகுந்த பரிசிலனை செய்யும்.

திரு. டி. மார்ட்டின் : பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு மதம் மாறிய காரணத்தினால் குறிப்பாக கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவ மீனவர்கள், கிறிஸ்தவ சாணார்கள் இதுபோன்ற வர்க்கத்திற்கு கொடுக்கப்படக்கூடிய கல்விச் சலுகை அதாவது ரெஸிடென்ஷியல் ஸ்காலர்ஷிப் போன்றவை கொடுக்கவில்லை என்று கூறப்படுவது உண்மையானால் அந்த பாரபட்சத்தை நீக்க தமிழக அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்கு ஹரிஜன மக்களுக்குத் தரப்படுகிற கல்விச் சலுகை தரப்பட்டுத்தான் வருகிறது. பொருளாதார ஏற்றத்திற்கான சலுகைகள் தரப்படவில்லையே தவிர கல்விக்கான சலுகைகள் அத்தனையும் ஹரிஜன மக்களுக்குத் தரப்படுகிற சலுகைகள் அத்தனையும் இன்று மதம் மாறியவர்களுக்கும் தரப்பட்டு வருகின்றன.

திரு. ர. வீராசாமி : ஹாஸ்டலில் தங்கிப் படிக்கிற மாணவர்களுக்கு வழங்கப்படுகிற உதவித் தொகைக்கும் ஹாஸ்டலில் இடம் கிடைக்காமல் வெளியே தங்கிப் படிக்கிற மாணவர்களுக்கு வழங்கப்படுகிற உதவித் தொகைக்கும் வித்தியாசம் இருக்கிறதா ? அப்படியானால் அதைப் போக்க இந்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட வித்தியாசம் எதுவும் இல்லை.

திரு. கரு. ராம. கரியமாணிக்க அம்பலம் : பிற்பட்ட மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிற உதவித் தொகை மிகவும் ஏழையாக இருந்தும் கூட, குறைவான மார்க்குகள் வாங்கிய சில பேர்களுக்குக் கிடைக்கிறது. கூடுதல் மார்க்குகள் வாங்கியவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. அந்த மாதிரி நிலை இருப்பதால் எங்களைப் போன்ற பிரதிநிதிகளுக்குக்கூட அது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே அதை ஒரு அடிப்படையில், மார்க் அடிப்படையில், ஏழைகள் என்ற அடிப்படையில் கொடுக்க திட்டவட்டமாக அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : ஏழைகள் மிகக் குறைந்த மார்க்குகள் வாங்குகிறவர்கள் என்ற அடிப்படையில் தான் கொடுக்கப்பட்டு வருகிறது. சிலருக்குக் கொடுக்கப்படவில்லை என்ற குறை இருந்தால் அதைப் பற்றி தனியான முறையில் நேரில் தெரிவித்தால் அது குறித்து நடவடிக்கைகள் எடுக்கலாம்.

திரு. இல. பலராமன் : மாநிலத்தில் முதல் தரமாக தேறிய ஏழை ஹரிஜன பிள்ளைகளுக்கும், பின்தங்கிய வகுப்பினரின் பிள்ளைகளுக்கும் இதுவரை சலுகைப் பணம் வராத நிலை பரவலாக இருந்து வருகிறது என்ற நிலையில் எல்லா மனுக்களும் அரசாங்கத்திற்கு வரவேண்டுமென்ற நோக்கம் எதற்காக என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : ஏறத்தாழ எல்லா மாணவர்களுக்கும் தரப்பட்டு வருகிறது. ஒரு சில மாணவர்களுக்குத் தரப்படவில்லை என்றிருப்பதுகூட இன்னும் இரண்டு மூன்றுக் தினங்களில் தரப்பட முடியும். ஆனால் விண்ணப்பங்கள் செய்துள்ள எல்லா மாணவர்களுக்கும் தரப்படும் என்ற உறுதியை தருவதற்கில்லை.

திரு. எஸ். முருகையன் : ரூ. 300-க்குக் குறைவாக வருமானம் உள்ள எல்லா ஏழை மாணவர்களுக்கும் ஸ்காலர்ஷிப் வழங்குவதற்கு ஒரு திட்டம் இருக்கிறது. இந்த ஸ்காலர்ஷிப் பாரங்கள் கல்லூரிகளிலிருந்து அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுவதால் பல மாணவர்களுக்கு இந்த ஆண்டு மறுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காலதாமதத்தை ஏற்றுகொண்டு அந்த மாணவர்களுக்கு மீண்டும் ஸ்காலர்ஷிப் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : கல்லூரிகளிலிருந்து அனுப்பப்படுவதில் காலதாமதம் அதிகம் ஏற்படுவதாக நான் கருதவில்லை. ஆனால் அந்த ஃபாரங்களை பூர்த்தி செய்வதில் மாணவர்கள் செய்கிற தவறுகள், அந்தத் தவறுகளைத் திருத்திக் கொள்வதற்காக ஒதுக்கப்படுகிற நேரம் இவைகளால் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே காலதாமதம் ஆகாத அளவிற்கு விரைவில் தருவதற்கான முயற்சிகள் எப்போதும் எடுத்துக்கொள்ளப்பட்டுத்தான் வருகிறது.

திருப்பூர் நகர அமைப்பு

* 98 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ராமநகர் 1, 2, 3-வது வீதியில் வசிக்கும் பொது மக்கள் 23–6–1967 அன்று நகர அமைப்பு, சாலை அமைப்பது பற்றி அமைச்சருக்கு அனுப்பிய மனு வந்து சேர்ந்ததா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) சேர்ந்தது.

(இ) மனுவின் பேரில் திருப்பூர் நகராட்சி ஆணையாளரின் குறிப்புரை கேட்கப்பட்டுள்ளது. ஆணையாளரின் முடிவான பதில் எதிர்பார்க்கப்படுகிறது.